பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3·50

சுடர்: 5 பிரமோதூத ஸ்ரீ ஐப்பசி மீ 08 உ வியாழக்கிழமை (25 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 05 கதிர்: 232

## மனித உரிமை மீறல்கள் மற்றும் குண்டுவீச்சுகள் தொடர்ந்தால்

# நிதி உதவிகள் நிறுத்தப்படும்!

# அரசுக்கு கடும் எச்சரிக்கை!!

## ஐரோப்பிய பொருளாதார சமுகத்தின் 12 நாடுகள் கூட்டாக அறிவிப்பு

லண்டன், அக். 25

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுதல், அப்பாவிப் பொது மக்கள் நெருங்கி வாழும் இடங்களில் விமானக் குண்டு வீச்சை நடத்துதல் ஆகியவை தொடர்பாக அந் நாட்டு அரசாங்கத்தை ஐரோப்பிய பொருளாதார சமூகம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது;

இந்த அநீதிகள் தொடருமானால் இலங்கை அரசுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் அபிவிருத்திக்கான தொழில் நுட்ப உதவிகள் யாவும் நிறுத்தப்படும் எனவும் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் எச்சரித்துள்ளன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இன்று பாரிஸில் ஆரம்பமாகவிருக்கும் வேளையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பது இலங்கை அரசுக்கு பலத்த பாதிப்பை விளைவிப்பதாக அமையும் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் 85 கோடி அமெரிக்க டாலர் உதவி வழங்குமாறு உதவி வழங்கும் நாடுகளிடம் இலங்கை கேட்கிறது என்பது

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தென்மராட்சியில் பல இடங்களிலும் தாக்குதல் :

# சாவகச்சேரி சந்தை மீது நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்கு

சாவகச்சேரி, அக். 25

சாவகச்சேரிச் சந்தையின் மீது நேற்றுக்காலை 10 மணி அளவில் மூன்று பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

குண்டு வீச்சில் ஒருவர் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மரணமானார். பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சாவகச்சேரிச் சந்தையில் அரிசி, வெங்காயம் விற்பனை செய்யும் பகுதி மீது இரு குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் அந்தப் பகுதி சின்னாபின்னமாகிச் சிதறிக் காட்சியளித்தது விற்பனைப் பொருள்களும் தூக்கி வீசப்பட்டு நாசமாகிக் காணப்பட்டன.

இந்தச் சம்பவத்திலேயே தலை வேறாகத் துண்டிக்கப்பட்ட அந்த நபர் பலியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாய், கல்வளையில் பொம்மர்கள் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், அக் 25

சண்டிலிப்பாய், கல்வளைப் பகுதிகளில் நேற்று நண்பகல் 12. 15 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டுவீச்சு, றொக்கட் தாக்குதல்களை நடத்தின.

சண்டிலிப்பாய் சந்திப்பகுதியில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் வீடு ஒன்று முற்றாகச் சேதமடைந்தது. அருகில் இருந்த அரிசி ஆலை (மில்) யும் பாதிப்படைந்தது எதிர்ப்புறமாக உள்ள கடைகளும் சிறு சேதங்களுக்கு இலக்காகின.

கல்வளையிலும் குண்டு வீச்சு, றொக்கட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு வீட்டின் முற்றத்தில் விழுந்த குண்டினால் அந்த

[4 ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கில் நேற்றும் மோதல் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், அக். 25

மாவிட்டபுரம், வீமன்காமம், மயிலிட்டி, காங்கேசன், கட்டுவன் பகுதிகளில் நேற்றும் ஆங்காங்கே மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

மாவிட்டபுரம், வீமன்காமம், கொல்லன்கலட்டி பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை 11 30 முதல் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி பலாலியைச் சூழவுள்ள பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினரே இந்த ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

தெல்லிப்பளைச் சந்திக்கும், மாவிட்டபுரம் அரசடிச்சந்திக்கும் உட்பட்ட பகுதி[illegible]லேயே அனேக ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

(உ-3-5 68)

## கட்டுவனில் கப்டன் றேமன் வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 25

நேற்று கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற நேரடி மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் றேமன் வீரமரணமடைந்தார். (உ)

## அதிகாரி பலி!

அம்பாறை நீலியம்பத்தனையில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

## ஆனையிறவில் 2 சிப்பாய்கள் பலி

நேற்று ஆனையிறவு முகாம் பகுதியில் விடுதலைப் புலிகள் [illegible] முந்தநாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மட்டு. நகரில் படையினர் மீது புலிகள் திடீர் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம். அக். 25

மட்டக்களப்பு நகரில் பரவலாக பல இடங்களில் ஸ்ரீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார் என்றும்-

மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் கடந்த திங்களன்று இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் இரண்டு பொலீஸார் காயமுற்றனர் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

[உ]

## இதுவரை யாழ். வந்த பணம் ரூ. 1 கோடி 60 லட்சம் மட்டுமே!

யாழ்ப்பாணம், அக். 25

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் பணப்புழக்கத்தை ஒரளவேனும் சீராக்க ஆகக் குறைந்தது 50 கோடி ரூபா தேவை ஆனால் யுத்தம் தொடங்கிய பின்னர் கொழும்பிலிருந்து இதுவரை வந்த பணமோ சுமார் ஒன்றரைக் கோடி ரூபா மட்டுமே.

யாழ். செயலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியக்காரர்களின் கொடுப்பனவு, செயலகங்களின் நடைமுறைச் செலவீனம் ஆகியவற்றுக்கு 49 கோடி ரூபா தேவை எனவும் அந்தத் தொகையை பணமாக வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் 4 சிப்பாய்கள் உயிரிழப்பு

கடந்த சனியன்று வாகரைப் பகுதியில் ரயில் பாதை வழியாகச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் நான்கு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

[உ]

## பெரும்பான்மையை நிரூபிக்க

# சிங்குக்கு 2 வார அவகாசம் ஜனாதிபதி வழங்கினார்

புதுடில்லி, அக். 25

எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் - 14 நாட்களுக்குள்- நாடாளுமன்றத்தைக் கூட்டி அரசுக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும்படி பிரதமர் வி. பி. சிங்கை ஜனாதிபதி வெங்கடராமன் கேட்டிருக்கிறார்.

பிரதமர் வி. பி சிங் நேற்றுக் காலை ஜனாதிபதியுடன் நடத்திய சந்திப்பின் பின்னர், ஜனாதிபதிச் செயலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

"ராம ஜன்ம பூமியில் சர்ச்சைக்குரிய ராமர் கோவிலை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கட்டத் தொடங்கப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்திருக்கிறது.

அந்த நடவடிக்கையைத் தடுக்கும் போது நாட்டில் சட்டம், ஒழுங்கு தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வி. பி. சிங் அரசின் தலைவிதி 7 ஆம் திகதியன்று தெரியும்

தேசிய முன்னணி அரசுக்குள் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி நடைபெறும்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் பி. உபேந்திரா ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதே வேளை —

இந்தக் கூட்டத்தில் அரசின் நம்பிக்கை கோரும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கப்போவதாக பாரதீய ஜனதாக் கட்சி நேற்று அறிவித்தது.

[உ-எ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### இடமாற்றம்

இல. 66 பெரிய கடை யாழ்ப்பாணம் என்னும் முக வரியில் இயங்கிய அம்பிகா வதி பென்சி கூட்ஸ். வாடிக் கையாளரின் பாதுகாப்பு கருதி 54, அம்மன் வீதி. (வீர மாகாளி அம்மன் கோவில் அருகாமை) நல்லூர் எனும் முகவரிக்கு மாற்றப்பட்டுள் ளது. (14526)

### தவறிவிட்டது

வடிவேலு திவாகரன் ஆகிய எனது 730550928 V இலக்க அடையாள அட்டையும் முக் கிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் (Paurse) ஒன்றும் கொழும்புத்துறைக்கும் ஆரிய குளச் சந்திக்கும் இடையில் 22-10-90 அன்று தவறிவிட் டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கு மாறு தாழ்மையுடன் கேட் டுக்கொள்கின்றேன். (14545)

### மில்க்வைற் செய்தி

1990 இல் மாதாந்தம் பெற் றுக்கொள்ளப் பதியப் பட் டவை டிசம்பர் மாதத்துடன் முடிவடைகின்றன. 1991 இல் மில்க்வைற் செய்தி வருடம் முழுவதும் பெற்றுக்கொள்ள மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் 300 அல்லது பணம் / காசுக்கட்டளை ரூபா 50/- அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளவும். —மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி/5335)

### விற்பனைக்கு

அல்சேசன் நாய்க்குட்டிகள் [30 நாட்கள்] விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கியது தொடர்பு: பொ. தில்லை ராசா 3ம் கட்டை பருத்தித் துறை வீதி, கல்வியன்காடு. (Organ Classe) எதிர்வீடு. [14549]

### நியூவிக்ரேஸ்

நியூ விக்ரேஸ் ஸ்தாபனம் வழமை போல் இயங்குகின் றது. வாடிக்கையாளர்கள் தொடர்புகொண்டு பொருள் களை பெற்றுக் கொள்ள லாம். காலை 8 30 தொடக் கம் 12 - 30 மணிவரை தொடர்பு கொள்ளலாம். (14532)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற் றும் தமிழ், ஆங்கிலம் ரைப் பிங் வேலைக்கும் Fudo Enterprises. பிரதான வீதி, மானிப்பாய். Bank - Siva Studio அருகாமையில். (சி-5219)

### போட்டோபிரதிகள்

தரமான போட்டோ பிரதி களுக்கு தொடர்பு கொள் ளுங்கள் 'மண்டேலாரேடர்' 550/8A கே. கே. எஸ். வீதி [நட்டாதெரு சந்திக்கு அரு காமையில்] 256/A, பருத்தித் துறை வீதி. (தேரடி முன் பாக) நல்லூர் யாழ்ப்பா ணம். [14550]

---

## ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**ஐயாத்துரை விஜயகுமார்**

பிறப்பு: 05 — 03 — 1967

இறப்பு: 25 — 10 — 1983

ஆண்டுகள் ஏழு கழிந் தாலும் உன் நினைவு கள் எம்மை விட்ட கலா!

என்றும் உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
சகோதரிகள்,
மைத்துனர்,
மருமக்கள்,
உற்றார்,
உறவினர்கள்.

இணுவில் கிழக்கு [சி 5342]

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## இலங்கை

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்கான வீடொன்றைக் குத்தகைக்குப் பெறுதல்

விருந்தினர் விடுதியாகப் பயன்படுத்துவதற்காக மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு வீடொன்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தேவைப்படுகின்றது. குத்தகைக்கு கொடுக்கப்படவுள்ள வீடு பின்வரும் தேவைகளைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி வளாகத்தி லிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத் துள் அமைந்திருத்தல் வேண்டும்.
2 தளப்பரப்பு 150 சதுர மீற்றர்களுக்கு குறைவாக இருத்தலாகாது.
3. குறைந்த பட்சம் மூன்று படுக்கை அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்
4. வீட்டின் முன்பக்கம் வாகனங்கள் தங்கி நிற்கு மிடவசதி, பூந்தோட்ட இடவசதி உடையன வாய் இருத்தல் வேண்டும்.
5. கிணறு, மின்சாரம், குழாய் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. குத்தகைக் காலத்தின் போது சிறிய திருத்தங் களைச் செய்வதற்கான உரிமையைப் பல்கலைக் கழகம் கொண்டிருத்தல் வேண்டும்.

வீட்டைக் குத்தகைக்கு விட விரும்புவோர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தின் அளவைக் கடிதத்தில் குறிப்பிட்டு 1990-11-09 ஆம் தேதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வீட்டைக் குத்தகைக்கு விடல்" என எழுதப்படல் வேண்டும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
23-10-1990 [சி-5340]

---

### சனசமூக நிலையங்களின் புனரமைப்பு

## கலந்துரையாடல்

இடம்: கைலாசபதி அரங்கு
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

காலம்: 26 - 10 - 1990 காலை 10.00மணி

அழைக்கப்படுவோர்: -

சகல சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், சனசமூகநிலையங்களின் சமாஜ சம்மேளன அங்கத்தவர்கள், பிரதேச சபை அதி காரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், உபஅலு வலகப் பொறுப்பதிகாரிகள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

இதில் பங்குபற்றாத சனசமூக நிலையங்கள், சம்மேளனம், சமாஜங்கள் இயங்கவில்லையெனக் கருதப்பட்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சம்பந்தப்பட்டோர் கவனத்திற் கொள் ளவும்.

சு. டிவகலாலா,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
(சி-5334) யாழ் மாவட்டம்.

---

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு.
**சிவசிதம்பர பிள்ளை சிவராஜபிள்ளை**
(புளோறா)
(முன்னாள் வர்த்தக சங்கத் தலைவர் சுன்னாகம்)

தோற்றம்: 24 — 01 — 1949

மறைவு: 25 — 10 — 1988

**திதி: 03 - 11 - 1990**

ஆறாத் துயர் தந்து
மீளாத் துயில் கொண்டு
ஆண்டு இரண்டு
ஆகினதோ உங்கள்
நினைவு என்றும்
எங்களை விட்டு
அகலாது.

பிரிவால் துயருறும்:
மனைவி.
பிள்ளைகள்,
தாய், சகோதரம்.

பங்களா ஒழுங்கை
மல்லாகம். [5339]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

## திரு. சின்னக்குட்டி வைத்திலிங்கம்

(இமையாணன் மேற்கு உடுப்பிட்டி அரசினர் வைத்தியசாலை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)

**அன்னை மடியில்:** 04 - 10 - 1927 **ஆண்டவன் நிழலில்:** 04 - 11 - 1989

**திதி: 25 — 10 — 1990**

சண்ணை இமை காப்பது போல்
எம்மை வண்ணமுறக் காத்து வந்தீர்
காலமெலாம் உம் நிழலிருக்கக்
காலனுக்குத் தான் பொறுக்க வில்லை
சழிந்து விட்டது ஓராண்டெனினும்
எம் கண்ணீர் வெள்ளம் குறையவில்லை
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

— குடும்பத்தினர்

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. [14528]

---

## 3 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



## ந. இரத்தினசபாபதி

(இளைப்பாறிய ஆசிரியர்)

**தோற்றம்:** 05 - 09 - 1928 **மறைவு:** 29 - 10 - 1987

எங்கள் அன்புத் தெய்வமே! எந்நாளும் உங்கள் பிரிவால் வருந்தும்:

**மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், உறவினர்.**

(இ/5339)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அயலகத்தில் அரசியல் அனல்

எதிர்பார்த்ததுபோலவே ராம ஜன்ம பூமி — பாப்ரி மஸ்ஜித் விவகாரம் இந்திய உபகண்டத்தில் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. பதினொரு மாத வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசு ஆட்டம் கண்டுள்ளது,

அறுதிப் பெரும்பான்மை இல்லாத தேசிய முன்னணி அரசு தொடர்ந்து பதவியில் இருக்கலாமா, இருக்க முடியுமா, இருக்குமா என்ற கேள்விகள் சூடான வாதப் பிரதி வாதங்களை உண்டாக்கி, பாரதத்தில் பெரும் அரசியல் அனலை மூட்டியுள்ளன.

தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க மூன்று வார அவகாசம் தருமாறு பிரதமர் வி. பி. சிங் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறார், காங்கிரஸ் எம். பிக்கள் சிலரின் ஆதரவைப் பெறுவதற்கு திரு. சிங் முயல்வார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். தாம் அண்மையில் நடைமுறைக்குக் கொண்டு வந்த மண்டல் கமிஷன் சட்டத்தினால் காங்கிரஸில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற முடியும் என்று திரு சிங் நம்புகிறார்

அறுதிப் பெரும்பான்மை இல்லாத தேசிய முன்னணி அரசு பதவியில் நீடிக்க முடியாது. அப்படி ஒட்டிக் கொள்ள முயல்வது அடாத்தானது, தார்மீக, சட்ட, அரசமைப்பு கோட்பாடுகளுக்கு முரணானது என்று இந்திரா காங்கிரஸ், ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் எடுத்துக் கூறி ஆட்சேபம் தெரிவித்துள்ளது,

இந்த இடக்கு முடக்கான நிலையில் என்ன செய்வது என்று தெரியாத. ஒரு தீர்மானத்துக்கு வர முடியாத திரு. வெங்கட்ராமன் சட்ட மற்றும் அரசமைப்பு நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்.

ஆனால் எதிர்க்கட்சியில் வீற்றிருக்கும் இந்திரா காங்கிரஸ், தேர்தல் நடத்தப்பட்டு தான் அமோக பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வரவே விரும்புகிறது. பிரசித்தி பெற்ற 'மார்க்'' நிறுவனம் கடந்த ஜூனில் நடத்திய கருத்துக் கணிப்பில், திரு சிங்கைவிட, திரு. ராஜீவ்காந்தியையே தேசிய முன்னணியைவிட இந்திரா காங்கிரஸையே மக்கள் அதிகம் ஆதரிப்பதாகபுள்ளிவிவரம்வெளியிட்டுள்ளது. தேர்தல் ஒன்று நடந்தால் ராஜீவே மீண்டும் பதவிக்கு வருவார் என்பது அரசியல்நிபுணர்களின் கருத்து.

இந்தியாவில் காங்கிரஸ் ஒன்றினாலேயே பலமான, ஸ்திரமான அரசை அமைக்க முடியும் என்ற நிலைப்பாடு மீண்டும் ஊர்ஜிதம் செய்யப்படலாம். 1977 இல் மொரார்ஜியின் ''சாம்பார்'' அரசு விழ்ச்சி கண்ட அதே நிலை, வி. பி. சிங் அரசுக்கும் ஏற்பட்டிருப்பது அதனையே எடுத்துக்காட்டுகிறது.

மத சார்பின்மையை பேணுவதில் புகழ்பெற்ற, உலகின் மிகப்பெரிய சனநாயக நாடான இந்தியாவில், மத சம்பந்தமான விவகாரமே இப்போது அரசியலை உலுப்பிஇருக்கிறது.

இது முளையிலேயே கிள்ளப்படவேண்டும். இல்லையேல் இந்தியா மத. இனரீதியாகப் பிளவுபடும் அபாயம் உண்டு என்று சர்வதேச அரசியல் நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

அங்கு எது நடந்தாலும் பக்கத்தில் உள்ள எங்கள் குட்டி இலங்கையிலும் ஒரு தாக்கம் — மாற்றம் — வரும் என்பதில் சந்தேகமில்லை.

# 2,000 கடற்றொழிலாளர் குடும்பங்கள் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்வு

## உதவி வழங்க அரச அதிபரிடம் கோரிக்கை

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளால் மயிலிட்டிக் கிராமத்தில் இருந்து 2,000 கடற்றொழிலாளர் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இவர்களுக்கு உதவி அளிக்குமாறு யாழ். அரச அதிபரிடம் மயிலிட்டி கிராம கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்றை பிரஸ்தாப அமைப்பின் தலைவர் திரு. செ. தனபாலசிங்கம் அரச அதிபருக்கு அனுப்பி உள்ளார்.

கடற்றொழில் ஒன்றையே நம்பி வாழும் இக் குடும்பங்கள் 1983 ஆம் ஆண்டிலிருந்தே தொழில், உடைமை, உயிர் இழப்புகளுக்கு உள்ளாகி பெரிதும் இன்னலுறுவதாகவும், பட்டினிச்சாவை எதிர் நோக்கி இருப்பதாகவும் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-68)

## கண் சிகிச்சை முகாம்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் இலவச கண் சிகிச்சை முகாமும் மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவமும் நடைபெற உள்ளன.

மேற்படி சிகிச்சை முகாம் சித்தன் கேணியில் உள்ள வட்டு-லயன்ஸ் கட்டடத்தில் லயன் டாக்டர்களால் நடத்தப்படும்.

இதேசமயம் லயன்ஸ் கழகத்தின் வைத்திய சேவையால் இலவச வைத்திய பரிசோதனை நடத்தப்பட்டு மருந்து வகைகள் பிரதி ஞாயிறு தோறும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ - 6)

## ஆனையிறவில் இருந்து கிளிநொச்சிக்கு ஷெல்

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

கடந்த ஞாயிறு மாலை இச் சம்பவம் நடந்தது. நீண்ட நாள் இடைவெளியின் பின் ஷெல்கள் விழுந்து வெடித்த போது மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர். [இ-76]

## திரை நீக்கம்

வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரியாகவும், வேலணைக் கொத்தணியின் அதிபராகவும் வும் இருந்த அமரர் த. சண்முகநாதனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், உருவப்பட திரைநீக்கமும், நினைவு மலர் வெளியீடும் இன்று வியாழன் காலை 10.00 மணிக்கு சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-6)

## தபாற் பொதிகள் தீவுப் பகுதிக்கு உரியவை

'சிகிரியா' கப்பலில் கொண்டுவரப்பட்ட தபாற் பொதிகளில் பெரும்பாலானவை தீவுப் பகுதிகளுக்கு உரியவை என்று தெரிவிக்கப் பட்டது.

கப்பலில் கொண்டுவரப்பட்ட இந்தத் தபால் பொதிகளை செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறையில் இருந்து கொண்டுவந்தது தெரிந்ததே.

இதேவேளை யாழ். பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப்பட்ட பொதி ஊர்காவற்றுறைக்கு உரியது என்று பதில் பிரதமதபாலதிபர் திரு. எம். தேவசகாயம் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-5)

# கவச வாகனத் தாக்குதல் தடைப்பட சுவர் ஏறி கொத்தளத்திற் புகுந்தனர்

## (VI)

ஆகஸ்ட் 5ஆம் திகதி அந்தப் பின்னிரவு வேளை......

ஷெல் மற்றும் பசிலன்-2000 ஆகியவை கொண்டு விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதல்களினால் கோட்டை அதிர்ந்து உள்ளேயிருந்த படையினர் நிலை குலைந்து அவஸ்த்தைப் பட்டுக் கொண்டிருந்த போது...

புலிகளின் கவச வாகனங்கள் கடற்கரை வீதியின் இரு பக்கங்களில் இருந்தும் கோட்டையின் பின் பகுதியை நோக்கி நகரத் தொடங்கின

எல்லாம் இட்டமிட்டபடி நடந்தால்–

கோட்டையினுள் சிப்பாய்கள் நிலைகுலைந்திருக்கும் அந்த வேளையில்- கவச வாகனங்களாக உருமாற்றப்பட்டிருக்கும் அந்த இரண்டு பாரம் தூக்கிகளும் கோட்டையின் பின்புறத்தை வேகமாக அடைந்து மளமளவென்று போராளிகளைக் கோட்டையின் பின்புறக் கொத்தளத்தில் இறக்கியிருக்கும்.

அந்தப் போராளிகள் கோட்டையின் பின்புறத்தில் தென்மேற்கில்- இருக்கும் கொத்தளப்பகுதியைக் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டில் கொண்டு வர அவர்களைத் தொடர்ந்து அந்த வழியாக நூற்றுக்கணக்கில் விடுதலைப் புலிகள் உள்ளே இறங்கி முழுக் கோட்டையையும்- உள்ளே இருக்கும் சிப்பாய்களுடன் சேர்த்து- கூண்டோடு கைப்பற்ற நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளின் போது உள்ளே இருக்கும் படையினர்- விடுதலைப் புலிகள் பிரதானமாக நுழையத் திட்டமிட்டிருக்கும் கோட்டையின் பின்புறத்தில்- தமது முழுக் கவனத்தையும் செலுத்தி பதில் தாக்குதல் நடவடிக்கை எடுக்கக் கூடும். அதைத் தடுத்துக் குழப்புவதற்காக மற்றொரு திட்டமும் தயாரிக்கப்பட்டது.

அதன்படி–

புலிகளின் கவச வாகனங்கள் கோட்டையின் பின்புறத்தை நோக்கி நகர முற்படும் அதேசமயம், முனியப்பர் கோவில் ... மாளிகை, துரையப்பா விளையாட்டரங்கு ஆகியவற்றின் பக்கங்களில் இருந்தும் சில கவச வாகனங்கள் கோட்டையின் முன்புறம் மற்றும் பக்கங்களை நோக்கியவாறு- குண்டுகளைப் பொழிந்தவாறு- முன்னேற வேண்டும்.

இதுதான் அந்தத் திட்டம்

நாலாபுறத்திலும் இப்படி கவச வாகனங்கள் முன்னேறுவதைக் கண்டு எந்தப் பக்கத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் கோட்டைச் சிப்பாய்கள் தடுமாறித் தவிக்கும் போது வாய்ப்பான பக்கங்களில் புலிகளின் அணிகள் உள்ளே நுழைய வேண்டும்.

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட தளபதி பானு தயாரித்த தாக்குதல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

இவைதான்.

#### கவசவாகனங்கள் நகரத் தொடங்க...

இதன்படி கவச வாகனங்கள் நகரத் தொடங்கிய அதே கணத்தில்......

எங்கிருந்தோ முளைத்தது போல அடுத்தடுத்து வானில் வந்து சேர்ந்தன. பொம்மர்கள் அவ்ரோக்கள், சீனச் சகடை மற்றும் ஹெலிகள்.

புலிகளின் கவசவாகனங்கள் முன்னேற முன்னேற கோட்டையின் கொத்தளப் பகுதியிலிருந்தும் விமானங்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்களில் இருந்தும் புறப்பட்ட குண்டுகள், ஷெல்கள், ரொக்கட்டுகள் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழையாய்ப் பொழிந்தன.

அந்தோ! சற்றுமுன்னர் விமானம் போட்ட குண்டினால் வீதியில் ஏற்பட்ட பாரிய குழியில் பின்புறக் கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்த புலிகளின் முதலாவது கவச வாகனம் சிக்கித் தடம் புரண்டது.

என்ன செய்வது? பின்னால் வந்த கவச வாகனம் அதனை இடித்து, முன்டித்தள்ளிக் கொண்டு முன்னேறிய போது......

ஆனாலும் அதிர்ஷ்டம் கோட்டைச் சிப்பாய்கள் பக்கம்தான் இருந்தது.

[illegible] புலிகள் நடத்திய தாக்குதலின் போது வீதிக்குக் குறுக்கே ஏற்பட்ட பாரிய குழியில் இரண்டாவது கவச வாகனமும் வீழ்ந்துவிட்டது.

என்னே கஷ்டகாலம்!

பாரம் தூக்கிகளைக் கொண்டு கொத்தளத்தின் மேற்பகுதியில்இருந்தசிப்பாய்களின் தலை உச்சிக்குமேல் போராளிகளை இறக்கி சிப்பாய்களை சமாதி கட்ட எடுத்த முயற்சி, இரு பாரம் தூக்கி (கவச) வாகனங்களினதும் இழப்பினால் ''சறுக்கிப்'' போனது.

#### மனம் தளரவில்லை

ஆனாலும் புலிகள் மனம் தளரவில்லை. சுயமுயற்சியில் சுவரை ஏறிக் கடக்கத் தீர்மானித்தார்கள்; பெரிய ஏணி ஒன்றைக் கொண்டு சென்று அதன் உதவியுடன் மதிலேறத் தொடங்கினார்கள்.

கவச வாகனங்கள் செயல் இழந்ததனால் ஏற்பட்ட தாமதங்களினாலும், ஏணி தேடிக் கொண்டுவருவதில் ஏற்பட்ட நேர விரயத்தினாலும் திட்டமிட்டபடி மதில் ஏறி நடக்கத் தாமதமானது

அதற்குள் நிலைகுலைந்த படையினர் தம்மைச் சமாளித்து ஒருவாறு சுதாரித்துக் கொண்டதால் கோட்டையின் பின்புறச் சுவரின் வழியே ஏணிகொண்டு ஏறிய புலிகளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

கீழிருந்து ஏறுகின்ற புலிகளை நோக்கி, மேலே கொத்தளத்திலிருந்து மழை கொட்டுவது போல கிரனேட்டுகள் பொழியப்பட்டன.

இதனால் கோட்டைச் சுவர் அடிவாரத்தில் பல போராளிகள் வீரமரணம் அடையும் நிலை உருவாயிற்று இன்னும் சில போராளிகள் படுகாயமுற்றனர்.

கிரனேட் வீச்சுகளினால் அவர்கள் ஏறிக்கொண்டிருந்த ஏணியும் உடைந்தது. ஆனாலும் எஞ்சிய போராளிகள் சளைக்கவில்லை.

அவசர தேவைக்காக கையில் எடுத்துச் சென்ற கயிற்றின் மூலம் உடைந்த ஏணியைக் கட்டி, அதனை மதிற்சுவரில் சாத்தி ஏற முயன்றனர் புலிகள்.

மீண்டும் அவர்களுக்கு அதிர்ச்சி ......

ஏணி உடைந்ததால் அதை மீண்டும் பொருத்திக் கட்டிய போது அதன் உயரம் குறைந்துவிட்டது! அந்த ஏணியில் ஏறிக் கோட்டைச் சுவரின் உச்சியை எட்டமுடியவில்லை

மீண்டும் ஏணி திருத்தப்படுகிறது. அருகில் கோட்டைச் சுவரில் இருந்த அரச மரத்துடன் இந்த ஏணியைச் சாத்தி ஏறும்முயற்சி தொடர்கிறது.

#### கொத்தளத்திற்குள் புகுந்தனர்

ஐந்து போராளிகள் ஒருவாறு கொத்தளத்திற்குள் புகுந்துவிட்டனர். அங்கு பதுங்கு குழிக்குள் இருக்கும் சிப்பாய்களை மடக்கி, வெற்றி கொள்ள ஒரு சமர் நடக்கிறது.

அந்தச் சிப்பாய்களை வெற்றி கொண்டு - தம்மால் கைப்பற்றப்பட்ட கொத்தள பகுதியை பலப்படுத்தி- அதனை விஸ்தரித்து - முன்னேறுவதற்கு அந்த ஐந்து போராளிகளும் எண்ணிக்கை அளவில் போதுமானவர்கள் அல்லர். ஆட்பலம் இன்மையால் அவர்களினால் முன்னெடுத்த வெற்றியை நிலை நிறுத்த முடியாமற்போயிற்று

ஆனாலும் அவர்கள் இறுதிவரை பின் வாங்கவில்லை சளைக்காமல்நின்று போராடி மடிகிறார்கள் அந்த ஐவரும்; அவர்களின் இறுதி மூச்சு பிரியும் வரை அவர்கள் கைகளில் இருந்த ஆயுதங்கள் கனன்று கொண்டே இருந்தன.

இவ்வாறு கோட்டையின் பின்புறத்தில் நேரடிச் சமர் நடந்து கொண்டிருந்த போது கோட்டையின் முன்புற வாசலும் மற்றைய பக்கங்களும் மோதலினால் அதிர்ந்து கொண்டிருந்தன.

முன்புறவாசலில் நடந்தது என்ன?

புலிகள் தாக்குதலைத் தொடங்கியஅதே கணத்தில்- சற்றும் தாமதிக்காமல் கோட்டைக்கு மேல்- பொம்மர்கள், அவ்ரோக்கள், ஹெலிகள், சீனச் சகடை எல்லாம் ஒன்றாக வந்து சேர்ந்தது எப்படி?

அடுத்து வரும் தொடர்களில் அவைபற்றிய தகவல்கள்.

(வளரும்)

### - கூர்விழியான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்தளைப்பகுதி தமிழர் வீடுகளில் வெளியார் தங்குவதற்குத் தடை!

கொழும்பு, அக். 25

வத்தளை, நா-எல, உணுப்பிட்டி, கந்தானை, களனி, நாகம ஆகிய இடங்களில் வாழும் தமிழர்கள் களனி இணைப்பதிகாரியான பொலீஸ் அதிபர் நளின் தெல்கொடவினால் எச்சரிக்கப் பட்டுள்ளனர்.

பிரஸ்தாப பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் தவிர்ந்த வெளியார் எவரையும் வீட்டில் தங்க அனுமதிக்கக் கூடாது என்பதே அந்த எச்சரிக்கையாகும்.

வேறு இடங்களைச் சேர்ந்த தமிழர் எவரும் இப்பகுதிகளில் நடமாடினால் உடனே பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்கண்ட பகுதிகளில் தமிழர்கள்வாழும் இடங்களை பொலீஸார் அடிக்கடி சுற்றிவளைத்து வருகின்றனர். (அ)

## நகரில் வங்கிகள் இயங்கின

யாழ்ப்பாணம், அக். 25

யாழ் நகரப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதை அடுத்து யாழ்நகரவங்கிகள் மீண்டும் நேற்று முதல் இயங்கத் தொடங்கின.

வங்கிகளில் வாடிக்கையாளர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள், டிராப்டுகளை வைப்பிலிடல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. [இ-6]

## சிங்குக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக ஸ்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படலாம்.

ஆகையினால் அந்தத் திகதிக்குப் பின்னர் - ஒரு வார காலத்தினுள் - நாடாளுமன்றைக் கூட்டி நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தலாம்'' - இப்படி பிரதமர் வி. பி. சிங் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை கூட்டி பலத்தை நிரூபிக்க பிரதமருக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதை பாரதிய ஜனதாக் கட்சி கண்டித்துள்ளது.

'' ஜனாதிபதி பிரதமரின் கோரிக்கையை ஏற்றிருக்கக் கூடாது. இது ஆட்சேர்ப்பதற்கு அரசுக்கு அவகாசம் வழங்க இடளிமக்கிறது'' — என்று அக் கட்சி மேலும் தெரிவித்தது.

இதனிடையில் - இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த சுமார் 100 எம் பிக்கள் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று பிரதமரை பதவி விலக்கக் கோரும் மகஜர் ஒன்றை ஒப்படைத்தனர். [உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### வி. எம். பேரம்பலம்

காரைநகர் சம்பந்தர்கண்டியைச் சேர்ந்த வி. எம். பேரம்பலம் (பட்டயக்கணக்காளர்; வி. எம். பேரம்பலம் அன்கம்பனி பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பங்காளர்) ஆஸ்திரேலியாவில் 20-10-90 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி முருகேசு-சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி. சண்முகத்தின் அன்பு மருமகனும், சௌபாக்கிய கௌரியின் அன்புக் கணவரும், திருமதி ஞானவதி கனகலிங்கம், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், க. கனகலிங்கத்தின் (லண்டன்) அன்பு மாமனாரும், யாழ் - கொழும்பு பிரபல வர்த்தகர்களான காலம் சென்ற வி. எம். சண்முகம், காலம் சென்ற வி. எம். பரமநாதன், திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை, வி. எம். கந்தையா (ஓய்வுபெற்ற வருமானவரி மதிப்பீட்டாளர்), திருமதி செல்லம்மா யோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் சிவானந்தன் (மலேசியா), திருமதி சௌந்திரகௌரி செல்வரட்ணம், திருமதி சௌ ஆம்புஜகௌரி குணபாலசிங்கம் டாக்டர் சர்வானந்தர் (மலேசியா) டாக்டர் சதானந்தர் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் இன்று 25. 10. 90 வியாழக்கிழமை நடைபெறும்.

தகவல்:

(சி/5343) திருமதி S. யோகரட்ணம்.

### அப்பாக்குட்டி இராசையா

சரவணை யேற்கைச் சேர்ந்த அப்பாக்குட்டி இராசையா 20-10-90 சனிக்கிழமை காலமானார்.

இவர் இராசையா நல்லம்மாவின் அன்புக் கணவரும், திரு. சிந்துராசா (பிரபல வர்த்தகர் கொழும்பு) திரு. விவேகானந்தன் (ஜேர்மன்), திரு. சிவானந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன், திரு. றமணானந்தன் (வர்த்தகர் செட்டிகுளம்), திருமதி ஜெயகௌரி குலசிங்கம், திரு. சுத்தானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சி. பர்வதபத்தினி சி. மகேஸ்வரி, ர. யோகமலர், ந. நிர்மலாதேவி, ந குலசிங்கம் (அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணம்), சு. ஞானலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சொர்ணம்மா, சொக்கலிங்கம் காலஞ்சென்ற கண்ணம்மா, கணபதிப்பிள்ளை (மலேசியா), திருமதி கமலம்மா ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 21-10-90 ஞாயிற்றுக் கிழமை சரவணையில் நடைபெற்றது.

தகவல்:

குடும்பத்தினர்.

சரவணை மேற்கு,
வேலணை. (14263)

## குடும்பஸ்தர் சூட்டுக்கு பலி

யாழ்ப்பாணம், அக். 25

மட்டக்களப்பு மாவட்டம் பெரியகளத்தில் நேற்று படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி ஆரையம்பதி வாசியான கணபதிப்பிள்ளை பூபாலரத்தினம் (வயது-40) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்தார். (உ)

## பாக். தேர்தலில் கடும் போட்டி

இஸ்லாமபாத், அக்: 24

பாகிஸ்தான் நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் நேற்று கடும் இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் பெரும் அசம்பாவிதம் ஏதுமின்றி நடைபெற்றன.

பதவி இறக்கப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி இத்தேர்தலில் கடும் போட்டியை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## நிதி உதவிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் அமைப்பின் எச்சரிக்கைக் கடிதம், பிரஸ்தாப அமைப்பைச் சேர்ந்த பன்னிரண்டு நாடுகளின் சார்பில் கொழும்பில் உள்ள வெளியுறவு அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் கொலைப் படைகள் சுதந்திரமாக நடமாடிவருவதை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் கேட்டிருக்கின்றன.

அமைதியை ஏற்படுத்துவதற்கென்று அளவுக்கு அதிகமான பலவந்தம் பிரயோகிக்கப்படுவதும், பொது மக்கள் நெருங்கி வாழும் இடங்களில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்படுவதும் இக்கடிதத்தில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. (உ-5)

## சண்டிலிப்பாய்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வீடு பலத்த சேதமானது. றொக்கட் வீச்சுக்களினால் ஒரு வீடு சேதமடைந்தது. தென்னை மரங்கள் சில முறிந்து வீழ்ந்தன.

சண்டிலிப்பாய், கல்வளைச் சம்பவங்களில் சிலர் காயமடைந்தனர். இவர்கள் மானிப்பாய், சங்கானை ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர்.

கனகரத்தினம் நாகேஸ்வரன் (36 வயது) சண்டிலிப்பாய், எஸ். கணேசானந்தன் (24 வயது), செல்வராசா [illegible] னாலை ஆகியோர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளனர். (ஒ-15-5-3)

## வி. பி. சிங்கிற்கு தேவிலால் முழு ஆதரவு தெரிவிப்பு

புதுடில்லி, அக். 25

நாடாளுமன்றத்தில்பெரும்பான்மை ஆதரவை இழந்து நிற்கும் தேசிய முன்னணியின் பிரதமர் வி. பி. சிங்கிற்கு அந்த அமைப்பின் மற்றொரு தலைவரான தேவிலால் பலத்த ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்டுவந்த கருத்து வேறுபாடுகளை அடுத்து சில மாதங்களுக்கு முன்னர்தான் தேவிலாலை துணைப் பிரதமர் பதவியிலிருந்து வி. பி. சிங் நீக்கினார் என்பது தெரிந்ததே.

புதுடில்லியில் நேற்று முன்தினம் அரசியல் நெருக்கடி ஏற்பட்டசமயம் மகாராஷ்டிர மாநிலக் கிராமப்புறங்களில் தேவிலால் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

பிரதமர் சிங் விடுத்த அழைப்பை அடுத்து தமது சுற்றுப் பயணத்தை இடையில் நிறுத்திவிட்டு அவர் அவசர அவசரமாகப் புதுடில்லி விரைந்தார்.

நேற்று பிரதமர்சிங் ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்றசமயம் அவருடன் தேவிலாலும் கூடவே சென்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தேவிலால் —

'பிரதமர் சிங்கின் தலைமையில் மாற்றம் இல்லை. முன்னர் பிரதமரை மாற்றவேண்டும் என்று நான் கேட்டது உண்மைதான். ஆனால் இப்போது அந்தச் சூழ்நிலை இல்லை' - என்றார் அவர். (உ)

## பாரத ஹர்த்தால் தோல்வி

புதுடில்லி, அக். 25

பாரதிய ஜனதா தலைவர் அத்வானி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து இந்தியாவில் நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தால் சில மாநிலங்களில் மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்பட்டது.

குஜராத், இமாலயப் பிரதேசம் ஆகியவற்றில் மட்டும் ஹர்த்தால் முழு வெற்றியளித்தது.

மற்றைய மாநிலங்களில் ஆங்காங்கே வன்செயல்கள் இடம்பெற்றன.

### 20 பேர் பலி!

சில மாநிலங்களில் வன்செயல்களில் ஈடுபட்டோர் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் குறைந்தது 20 பேர் மாண்டனர் என்று கூறப்பட்டது.

தமிழ்நாடு உட்பட அனேக மாநிலங்களில் ஹர்த்தால் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

தலைநகர் புதுடில்லியில் அரசு பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. (உ-எ)

## இடம் பெயர்ந்தோர் நிவாரணம் பெறுவதற்கு வசதி

சுன்னாகம் பல நோ. கூ. சங்க எல்லைப்பரப்பில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களில் நிவாரணம் பெறத்தகைமை உள்ளவர்களும், ரொக்கத்துக்கான பங்கீட்டுப் பொருள்களை பெறுபவர்களும் பின்வரும் இடங்களில் பொருள்களைப் பெற்றுக்கொள்ள சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

நாளை 26 ஆம் திகதிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

குப்பிளான் கிளை 20, 20பி யுடன் இணைக்கப்பட்ட பாவனையாளர்கள் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடியில் இருக்கும் கிளை இல. 12இல்பெற்றுக்கொள்ளலாம்.

ஏழாலை வடக்கு கிளை 21 இலும், உத்தரவு பெற்ற வியாபாரி திரு. புண்ணியமூர்த்தி கடையின் பாவனையாளர்களும் மானிப்பாய் வீதி உடுவில் கிளை இல. 7 இல் பெற்றுக்கொள்ளலாம்.

கிளை 21 ஏயின் பாவனையாளர்களும், உ. பெ. வியாபாரி திரு. சிதம்பரநாதன் கடையின் பாவனையாளர்களும் இணுவில் கிளை 14 ல் பெற்றுக்கொள்ளலாம்.

புன்னாலைக் கட்டுவன், திடற்புல கிளைகளான 30, 26 ஆகியவற்றின் பாவனையாளர்களும், உ. பெ. வியாபாரி திரு. சிவசம்பு கடையின் பாவனையாளர்களும் அயலிலுள்ள கிளைகளில் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (இ)

## சாவகச்சேரி சந்தை மீது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

அடுத்த குண்டுகள் கச்சாய் வீதியில் — சந்திக்குச் சமீபமாக — இருமருங்கிலுமுள்ள கடைகள் மீது விழுந்து வெடித்தன.

இதனால் அங்கிருந்த ஆறு கடைகள் முற்றாகச் சேதமடைந்தன. பல சைக்கிள்களும் சேதமுற்றன.

இன்னும் சில சைக்கிள்கள் மாயமாக மறைந்து விட்டதாகக் கூறப்பட்டது.

இதேவேளை, மட்டுவில், கெருடாவில், சரசாலை வடக்குப் பகுதிகளிலும் விமானக் குண்டு வீச்சுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாகத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதில் கோவிலுக்குச் சிறு சேதம் ஏற்பட்டதாகவும் தெரிய வந்தது.

நேற்றைய குண்டு வீச்சுச் சம்பவங்களின்போது காயமடைந்தவர்கள் சாவகச்சேரி, மானிப்பாய் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் வருமாறு:-

சிவநாதன் சிவசத்தியராசா [வயது 17] மட்டுவில், சின்னத்தம்பி திரவியச்செல்வம் [வயது 35] சரசாலை, செல்லப்பா சிவராசா [வயது 35] மட்டுவில், நந்தகுமார் [வயது 19].

சாவகச்சேரி சந்தை மீது கடந்த 9ஆம் திகதி ஹெலி தாக்குதல் நடத்தியதில் 12 அப்பாவிப் பொது மக்கள் பலியாகினர் என்பது தெரிந்ததே. (ஒ-31-15)

## இதுவரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தது.

ஆனால் இதுவரை 1 கோடி 60 லட்சம் ரூபா மட்டுமே இங்கு பணமாக அனுப்பப் பட்டுள்ளது.

இதேவேளை வழமையாக மாதாந்த சம்பளம், ஓய்வூதியம் போன்றவற்றுக்கு கட்டு நிதி அனுப்பப்படுவது வழக்கம். அந்தக் கட்டு நிதியும் தற்போது பல மாதங்களாக அனுப்பப்படவில்லை. இதனால் செயலகத்தின் கணக்கில் இருந்த பணத்தை விட அதிக தொகை வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது (Over Drawn).

இதனால் காசோலைகளைக் கூடவழங்கமுடியாத நிலையில் செயலகம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 10 - 1990 இல் அ[illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org